# வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை

இணைந்து வழங்குபவர்கள்

பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை

ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்

ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் : | திண்டுக்கல் | காலம் : | 02/05/2018 | முதல் | 06/05/2018 |
| அறிக்கை எண் : | 034/ 2018 | வெளியீட்டு நாள் : | | 01/05/2018 | |

| கடந்த கால வானிலை 27/04/2018 முதல் 30/04/2018 வரை | |
|---|---|
| காரணிகள் | கடந்த கால வானிலை |
| மழை (மி.மீ) | 6.0 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 37-39 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 26-27 |
| மேக மூட்டம் | 4-6 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 37-66 |
| காற்றின் வேகம்(கி.மீ. / மணி) | 6-12 |

எதிர்பார்க்கப்படும் வானிலை ( 06-05-2018 8.30 மணி வரை )

| காரணிகள் | 02-05-2018 | 03-05-2018 | 04-05-2018 | 05-05-2018 | 06-05-2018 |
|---|---|---|---|---|---|
| | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
| மழை (மி.மீ) | 8 | 1 | 2 | 10 | 10 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 39 | 39 | 39 | 40 | 40 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 27 | 27 | 27 | 28 | 28 |
| மேக மூட்டம் | 4 | 4 | 4 | 4 | 4 |
| அதிக பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 65 | 65 | 65 | 65 | 65 |
| குறைந்த பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 40 | 40 | 40 | 40 | 40 |
| காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 8 | 8 | 8 | 8 | 8 |
| காற்றின் திசை | தெற்கு | தெற்கு | தெற்கு | தெற்கு | தெற்கு |

**குறுஞ்செய்தி :**

வரும் 2, 5, 6ம் தேதிகளில் ஒரு சில இடங்களில் மிதமான மழையும் மற்றும் 3, 4ம் தேதிகளில் மிக லேசான மழையும் பெய்வதற்கான வாய்ப்புள்ளது. வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 8 கி.மீ வேகத்தில் தெற்கு திசையில் காற்று வீசக்கூடும்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள்: வெண்டை & கால்நடை**

தற்போது நிலவும் பருவச்சூழ்நிலையின் காரணமாக வெண்டை பயிரில் தண்டு மற்றும் காய்ப்புழுக்களின் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. இதன் தாக்குதலால் வெண்டைச்செடியின் இளங்குருத்து வாடித் தொங்கும்,மொக்கு மற்றும் பூக்கள் உதிர்ந்து விடும் ,காய்கள் உருக்குலைந்து காணப்படும். முதலில் பூச்சிகள் தாக்கப்பட்ட குருத்து, மொட்டு, பூக்கள் மற்றும் காய்கள் சேகரித்து அழிக்க வேண்டும். மேலும் முட்டை ஒட்டுண்ணியான டிரைக்கோகிராம்மா கைலோனிஸ் ஹெக்டேருக்கு 1,00,000 அளவுக்கு விட வேண்டும், ஹெக்டேருக்கு 12 இனக்கவர்ச்சி பொறி வைத்து கட்டுப்படுத்தலாம். 1 லிட்டர் தண்ணீருக்கு 5.0 கிராம் ஆசாடிராக்டின் 0.03% WSP (300 ppm) அல்லது 10 லிட்டர் தண்ணீருக்கு 5.0 மில்லி 5% ஆசாடிராக்டின் வேப்பங்கொட்டைக் கரைசல் ஆகிய மருந்துகளில் ஏதேனும் ஒன்றினை தெளித்து கட்டுப்படுத்தலாம்.

அதிகபட்ச வெப்பநிலை தொடர்ந்து உயர்வாக காணப்படுவதால் கால்நடைகளுக்கு நாள் ஒன்றுக்கு 80 முதல் 100 லிட்டர் தண்ணீரை 4 தவணையாக பகிர்ந்து கொடுக்கவும்.